மலர் 10 புரட்டாதி இதழ் 5

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்

## மதுரகவி மலர்



கௌரவ ஆசிரியர் :

குரும்பசிட்டி மு. க. சுப்பிரமணியம்

1-9-72 விலை சதம் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்ம நானும் குழந்தை

அம்மம்ம நானுன் குழந்தை — உன்
ஆசைக் கனியாக வந்தேன்

அம்மம்மா நானொரு வீரன் — விளை
யாட்டாய் உலகத்தை வெல்வேன்

நானொரு குட்டி யுலகம் — அம்மா
நானே இனிவரும் நாடு.

ஏனம்மா கவலை யினிமேல் — உன்
இன்பக் கனவே நானம்மா!

இந்தக் குதிரைமேல் ஏறி — அம்மா
ஏழுல கத்தையும் காண்பேன்;

தந்தைக்குப் பல்லாக்கு தருவேன் — உன்
தங்கப் பரிசுநான் அம்மா.

— கவியோகி சுத்தானந்த பாரதியார்

## நாவலர் நீதியுரைகள்

1. தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.
2. நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும்பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒருகாலத்தில் அது வாய்ப்பது அரிது.
3. சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.
4. தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப்படுகின்றவர்களே உத்தமர்.
5. எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!
6. தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன், அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமோ மிக இழிந்தது.


எமது அனுதாபங்கள்

அமரர் "மதுர கவி"
இ. நாகராஜனின் ஆத்மா
சாந்தி பெறப்
பிரார்த்திக்கின்றோம்.

* *

P. I. பெர்னாண்டோ
ஸ்தாபனத்தார்

பல் கட்டுபவர் — கண் பரிசோதகர்

51 A, பெருந் தெரு — யாழ்ப்பாணம்.



SELVAS

— Dealers in —
Sports Goods,
Type Writer Repairs, Sales & Service.

33, Main Street — JAFFNA.

செல்வாஸ்

33, பிரதான வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி


## ஆலோசகர் குழு

இரசிகமணி கனக. செந்திநாதன்

வி. கந்தவனம் B. A.

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

காரை. செ. சுந்தரம்பிள்ளை


—✻—

கடந்த பத்து ஆண்டுகளாக வெளிவரும் ஈழத்துச் சிறுவர் மாதப் பத்திரிகை.


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின் 15 வீதக் கழிவுண்டு.

விபரங்களுக்கு எமக்கு எழுதுக.

## வருடச் சந்தா

பொங்கல் மலர் தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 5-00 |
| இந்தியா | ரூபா | 6-00 |
| மலாயா | $ | 5-00 |

**வெற்றிமணி**

253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை)



## — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவேவிண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

| மலர் 10 | வெள்ளிக்கிழமை 1-9-72 | இதழ் 5 |
|---|---|---|


# மதுரகவிக்கு நிதி

மதுரகவியின் நினைவு குறித்து வெற்றிமணியை மதுரகவி மலராக வெளியிடுகின்றோம். பல எழுத்தாளர்களும் கவிஞர்களும் இம்மலரிலே மதுரகவியின் மாண்பைக் கூறித் தமது அஞ்சலியை அவருக்குத் தெரிவிக்கின்றனர். மதுரகவியின் பெயர் பெற்ற — உலகத் தமிழ் மகாநாட்டிலே பரிசு பெற்ற — 'பூம்புகாரில் ஒரு நாள்' என்ற கவிதையையும் இம் மலரிற் பிரசுரித்திருக்கின்றோம்.

இந்த மலரைப் படிப்பவர்களுக்கு இரு விடயங்கள் புலனுகக் கூடும். ஒன்று மதுரகவியின் மேன்மை. மற்றையது அவரது குடும்ப நிலை.

மதுரகவியின் மேன்மையைப் பற்றி எல்லோரும் அறிந்திருப்பார்கள். ஆனல் அவரது குடும்ப நிலைபற்றி எல்லோரும் அறிந்திருக்க முடியாது.

அவர் எழுத்தையே நம்பி வாழ்ந்தவர். எழுத்தால் உழைத்துக் குடும்பத்தை நடத்தி வந்தவர்.

இப்பொழுது —

அவரது மனைவியும் ஆறு குழந்தைகளும் கதியற்றுக் கண்ணீரில் நிற்கின்றனர்.

இவர்களுக்கு உதவுமுகமாக இலக்கிய நண்பர்கள் சேர்ந்து 'மதுரகவியின் குடும்பநல நிதிச் சபை' ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பணம் சேகரித்து வருகின்றனர். பல ஆதரவாளர்களும் இலக்கிய மன்றங்களும், சனசமூக நிலையங்களும் பணஞ் சேர்ப்பதில் இச் சபைக்கு உதவி வருகின்றன.

வெற்றிமணியும் தனது வாசகர்கள் மூலம் நிதி சேர்த்து இச் சபை மூலமாக மதுரகவியின் குடும்பத்துக்கு உதவ விருக்கின்றது. வெற்றிமணி வாசகர்கள் இதற்கு ஆதரவு நல்குவார்கள் என்பது உறுதி.

உங்களால் இயன்ற நன்கொடைகளை அனுப்பியுதவுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம். காசுக் கட்டளைகளை அல்லது காசோலைகளை

**வி. கந்தவனம்,**
**c/o வெற்றிமணி,**
**253 1/1, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு எடுத்து அனுப்ப வேண்டுகின்றோம். நிதி அனுப்புகிறவர்களின் பெயர்கள் வெற்றிமணியில் வெளியிடப்படும்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரகவி நாகராசன்......

# மறைந்தானே நம்மைவிட்டு......

இரசிகமணி கனக. செந்திநாதன்

"மதுரகவி நாகராசன் மறைந்துவிட்டான் நம்மைவிட்டு"
என்ற சொல்லை நான் கேட்டேன்;
என்ன அனியாய மிது!
அந்தகா! உன்செயல் அடுக்குமா?
உனது மனம் கல்லா! இரும்பா!!
கவியவன்தான் உந்தனுக்கு என்ன செய்தான்?
அவனை ஏன் அழைத்தாய்? உன் உலகு!
என்றே பரிதவித்தேன்; எழுதக் கை ஓடவில்லை...

இனிய மொழி; நல்ல உள்ளம்; எல்லோர்க்கும் நண்பன் அவன்
தமிழினையே வாழ்த்துகின்ற சால்புடையோன்
பாட்டினிலே...
'வாழி நமதீழம் வாழி'யெனத் தேசபக்தி
குன்றாது பாடும் குயில்நம் மதுரகவி
இன்றோ அவன் இல்லை; இனியென்றோ கவியரங்கில்
நன்றாய் அவன்பாட்டை நாம் கேட்கப் போகின்றோம்?

'மத்தாப்பு' என்னும் குறுநாவல் தன்னில்
மதுரகவியே முன்நின்றாய்......
சித்தம் மகிழும் 'மணிமகுடத்தில்'
சீர்பெற் றுயர்ந்தே முன் நின்றாய்...
நித்தம் இனிக்கும் 'நீதிக் கரங்கள்'
நீயே படைக்க முன் நின்றாய்
இத்தரைமீது உத்தம கவியே!
என்னோ டிணைந்தாய்; எங்குற்றாய்?



அழியாப் புகழ் கொள் நிறைநிலா.
அவன் படைத்த நல்ல நூல்
அழகர்ர் சிலம்பு சிரித்தது
அவன் செய்தளித்த தேன்கூடு.
களிகொள் வாழ்க்கை வசந்தம் கற்
கண்டாம் நல்ல புத்தகம்
தெளிவாய்ப் பாட சிறுவர்நூல்; செய்தே
தந்தான் குயில் கூடு.

சென்னையில் நடந்த தமிழ் விழாவில்
சிறந்த உன் கவிக்குப் பாராட்டு
எங்கள் இதயம் களிகூர
எடுத்த கவியே, எங்குற்றாய்!
மன்னும் யாழ். இலக்கிய வட்டம்
மகிழ்ந்து தலைவன் எனப் போற்றி
அன்பாய் என்றும் அழைத்த கவி
அதையும் நீத்து எங்குற்றாய்!!
சொன்ன உடனே விரைவாகச்
சொல்லும் பொருளும் சுவை சேரக்
கன்னல் தமிழில் கவிதை சொலும்
கவிஞர் தலைவ எங்குற்றாய்!
நன் மனதுடனே முனியப்பர்
நண்ணும் ஆலயம் வந்தணுகி
என்வினை தீர்ப்பாய் என்று தொழும்
எங்கள் கவியே எங்குற்றாய்!!

இந்த நாட்டில் பேனை பிடித்து
என்றும் வாழ்வேன் என்றுறுதி
கொண்ட கவிஞன் குடும்பம் இன்று
கொழு கொம்பில்லாக் கொடிபோல
நின்று வருந்தும் நிலைகாணீர்,
நெஞ்சம் தன்னில் ஓர் சபதம்
இன்றே எடுமின்! இயன்றவரை
ஈந்தே காப்போம் என்பதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுர கவி நாகராஜ!

1. அல்வாய் மதியாய் அரிதுறத் திகழ்ந்த
அருட்கவி நாக ராஜநின்
சொல்லால் மகிழாச் சுவையறி யாரெனச்
சொல்லினும் மிகையோ வின்று
எல்லா நலமும் இயைந்திடு விண்ணினை
இனிதென வெண்ணியோ மண்ணில்
நில்லா தேகினை நிமலனும் நின்சொலால்
நிலைபெறும் இன்பம் காண்பான்!

2. கரும்பான கவிதைகளைக் கணப்பொழுதில் யாத்துவந்து
கல்லார்க்கும் மற்றெல் லார்க்கும்
மருந்தாக அளிக்கின்ற மன்னியநற் சீருலவும்
மதுரகவி நாக ராஜ
வருந்தாது நின்னெழில்சேர் வதனமது சுருங்காது
மனமதிலே நிறைவு கொண்டு
விருந்தாகச் சென்றனையோ விண்ணவர்தம் உலகினுக்கே
மிகவிரைந்து விளம்பு வாயே!

— பொலிகை ச. திருப்பதி



# புகழ் நாக ராஜ நண்பா!

(1)

முத்தன்ன கவிகள் தந்தாய்
மூச்சென்ன விளங்கி வந்தாய்
வைத்தின்ன பொருள்பா டென்றால்
மாரிபோற் பொழிந்து நின்றாய்
எத்தன்மை எழுத் தாளர்க்கும்
இனியனாய் உலவி வென்றாய்
பொத்தென்ன வீழ்ந்த தென்னே
புகழ்நாக ராஜ நண்பா!

(2)

ஆவினிக் கவிய ரங்கில்
ஆர்க்குநின் குரல்கேட் பேனோ
பாவியேன் குற்ற மென்னோ
பாவளச் சிறப்பை யெல்லாம்
மேவிவந் துன்னைக் கண்டு
மெய்மறந் தினிக்கப் பேசப்
பூவினில் இனிவாய்ப் பெங்கே
புகழ்நாக ராஜ நண்பா!

(3)

ஆவியை உருக்கிப் பாட
அன்பினைப் பெருக்கிப் பாட
மேவிய நெறிகள் காட்ட
மேன்மைகொள் நீதி நாட்டப்
பாவலர் மகிழப் பாட
பாலகர் நெகிழப் பாடப்
பூவினில் இனியா ருண்டோ
புகழ்நாக ராஜ நண்பா!

(4)

மானமே உயிர்மூச் சென்றாய்
வாழ்க்கையோர் வசந்த மென்
கூனினை நிமிரச் செய்தாய் [றாய்
குருடரை விழிக்கச் செய்தாய்
ஆனதண் டமிழ்ச் சொல்லாலே
ஆயிரம் வித்தை செய்தாய்
போனதோ மதுரப் பாடல்
புகழ்நாக ராஜ நண்பா!

(5)

களனியைப் போலப் பொங்கிக்
கரைபுரண் டோடிப் பாய்ந்த
அளவிலும் ஆக்க மன்றி
அல்ல லொன்றான தில்லைக்
களனியின் மேலோய் ஈழக்
கவியுல கிருள நெஞ்சம்
பொளிவிழப் போன தென்னே
புகழ்நாக ராஜ நண்பா!

கவிஞர் வி. கந்தவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுர கவி மறைவு

1. யாழ்நகர் மறும லர்ச்சி
இலக்கிய வட்டத் துள்ளே
தாழ்விலா துழைத்து நல்ல
தமிழ்ப்பணி பலவுஞ் செய்த
நீள்புகழ்க் கவிஞ ரேரும்
நிகரிலா நாக ராச,
வாழ்வெனும் பிணைப் பறுத்தே
வானகஞ் சென்ற தேனோ?

2. யானென தெனுஞ் செருக்கற்(று)
எவரொடு மிணைந் திருந்து
தேனென வினிக்கும் நல்ல
செந்தமிழ்ச் சுவை பொலிந்த
கானமார் கவிய ரங்கம்
கனக்கவிங் கியக்கிப் பின்னும்
வானிலுங் காட்ட வென்றோ
மறைந்தனை மதுர வாணா!

3. பண்டை நாட் பூம்பு காரைப்
பற்றிய செய்தி யாவும்
சந்தமாய்ப் பாடிச் சென்னைத்
தமிழ்மகா நாட்டி னர்பால்,
பைம்பலாய்ப் பெற்ற தங்கப்
பதக்கமுன் பரிசு ணர்த்தும்
சங்கதி யறிந்தோ தேவர்
தம்மிடத் துனை யழைத்தார்!

4. இனமொழி வளர்ச்சிக் காக
ஈழநாட் டெழுச்சிக் காக
கனவிலுங் கவிதை பாடுங்
காதலைக் கைவி டாமல்,
மனநிறை வோடு எல்லா
மக்களும் மதிக்க வாழ்ந்த
குணபதி உன்னை யுந்தான்
கொன்றதோ கொடிய கூற்றம்?

5. கவிகதை நாட கங்கள்
கருத்தரங் கத்தி லெல்லாம்
சவியுறத் தெளிந்து தண்மை
தழுவுநீ ரோட்ட மென்னப்
புவிபுகழ் தமிழீ ழத்தும்
பொலியநற் பணி புரிந்த
கவிஞனே, நினையு மீர்த்துக்
கரந்ததோ கால வெள்ளம்!

6. வளர்தமிழ்ப் பரம் பரைக்கு
வாய்த்தநற் கருத்தை யெல்லா
பழந்தமிழ்ப் பண்பி னோடு
பக்குவ மாகப் பாடி
இளந்தமி ழுள்ளம் யாவும்
எழுச்சிகொண் டிலக்கி யத்தி
களம்பல காண வைத்த
கவிஞனே, நினைக் காண்போமா

7. எழுத்தினை நம்பி வாழ்தல்
இயலுமென் றிருந்த வெண்ண
'வெளுத்திட'க் குடும்ப பாரம்
மிசப் பெரிதாகி நின்று
அழுத்திய தாலோ, தம்பி
அவலமுன் னருள் நெஞ்சத்தை
புழுக்கிய தாலோ நொந்து
புனிதனைப் புகல டைந்தாய்?

8. நாட்டினை உருப் படுத்தும்
நல்லெழுத் தாளர் தம்மை
வாட்டிடும் வறுமை போக்க
வழிவகை யாது மில்லை;
பாட்டிலே படிந்த நீயுன்
பாட்டிலே போயும் விட்டாய்;
ஊட்டிய தமிழ் சுவைத்தோர்
உன்குடிக் குதவு வாரோ?

— க. இ. சரவணமுத்



# வளவன் மதுரகவி

வெய்யிலின் வெப்பம் விளைக்கும் கொடுமையினை
மெய்யிலே தாங்கி மிகவிரைவாய் ஈருருளி
தன்னை உதைத்துச் சனிக்கிழமை பத்துமணி
என்றன்கல் லூரி இருக்கும் ஒழுங்கையிலே
வந்திட்டேன் அப்போது வந்தார் மதுரகவி
என்னை மறித்தே இருகால் தரையூன்றி
நின்று கதைத்தார் நெடும்பயணம் போனதம்பி
என்றனுக்கும் தோழன் இளைஞன் பிரிவதனைக்
கல்லும் உருகக் கரைந்திட்டார், அப்போது
பாலியத்தில் நட்பான பாவலரை நோக்கிநான்,
"எங்களைப் போல இருப்புக்கள் இல்லாதோர்
பங்கமுற்றுக் காலன் பதிசென்றாற் பாலகர்கள்
நட்ட நடுத்தெருவில் நாதியின்றி யேஅழுவார்
பின்னணியொன் றின்றிநாம் பிள்ளைகளைப் பெற்றுவிட்டோம்
உந்தம்பி உம்மோடு நானும் விலக்கல்ல
என்செய்வோம்" என்றுரைத் திரங்கி அகன்றிட்டேன்.

* * *

சனிக்கிழமை மாறிப்பின் ஞாயிறுமே வந்துபினர்
திங்களும் ஆகித் திரிகதிரோன் மாயுமுனர்.
செத்தார் மதுரகவி என்றிட்ட தீச்செய்தி
பத்திரிகை கண்டு பதைத்தேன் துயருற்றேன்,
நாற்பத்தைந் தாண்டினிலே நட்பான நல்லவரைக்
கூற்றம் பிரித்த கொடுமையினைக் கேள்வியுற்றே
கண்ணீர் பொழியக் கசிந்தழுதேன் அம்மாநான்.

* * *

சொல்லுக்குச் சொல்லழகு சொட்டுந் தமிழ்க்கவிஞன்
வல்லமை வாய்ந்தவோர் வாக்கிற் கதிபதியாம்
எல்லவரும் ஏற்க எழிற்கதைகள் நாவல்களைச்
செய்துதர வல்லான் சிறந்த படைப்பாளி
ஈழத்தின் நற்புகழை இங்கிருந்தே தென்னகத்தில்
வாழத்தான் வைத்த வளவன் மதுரகவி
போனானே போனான் புலம்பியழப் போயினான்
நாற்பத்தைந் தாண்டிங்கு நல்லவனாய் வாழ்ந்தவனை
ஏற்க விழைந்தே இறைவன் அழைத்திட்டான்.

— சொக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுகின்ற வாயெல்லாம் பொன்னைச் சொரிந்திட்டால்
ஏத்துகின்ற கையெல்லாம் அள்ளிக் கொடுத்திட்டால்
செத்தவனின் பாரி சிறுபிள்ளை வாழ்வாரே!
ஆதலாற் கண்ணீர் அநாவசியம் ஐயாநீர்
ஏதும் கொடுக்க இசைந்தால் அதுபோதும்
பிச்சையலத் தர்னமலப் பிழையாய் விளங்காதீர்
நச்சிடவும் நந்தமிழர் நல்லாக வாழ்ந்திடவும்
அச்சம் அகற்றிடவும் ஆண்மைபெற நின்றிடவும்
பாட்டுக்கள் பாடிப் பலகதைகள் சொல்லியவன்
வீட்டுக்கு நீர் அளிக்கும் காணிக்கை ஈதாகும்.

* * *

அட்சரத்துக் கிலட்சமென அள்ளிக் கொடுத்தவர்கள்
பட்சமுறப் பாவலர்க்குப் பரிசில் வழங்கியவர்
எங்கள் தமிழ்மன்னர் என்ப தறியீரோ?
அன்னோர் வழிவந்தோர் அள்ளிக் கொடுப்பதற்கு
மேலுந் தயங்குவரோ வீண்கதைகள் பேசாதீர்
சீதத் தமிழ்ப்புலவன் சீரார் மதுரகவி
செய்த தமிழ்த் தொண்டைச் சிந்தித் துதவுமென
மெய்யாகக் கேட்டேன் விலகிநீர் ஓடாதீர்!


## விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய
**முற்பணம்கட்டக்கூடியவிற்பனையாளர்கள்தேவை**
பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.
**விளம்பரம்சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**
20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.
ஆசிரியர்




# இறையடி இணைந்திட்டாயோ!

(1)

நற்றமிழ் கவிதை யாத்தே
நயவுரை நல்கும் நல்ல
பொற்புறும் கவிஞ ருள்ளே
பொலிவுறும் நாக ராஜ
நற்குண மணியே! ஈழ
நாட்டினின் புகழை நாட்ட
அற்புதக் கவிதை தந்தீர்
அனைத்துல கத்தோர் போற்ற.

(2)

பக்தியைப் பரவும் ஞானப்
பாங்கமைக் கவிகள் யாத்தே
திக்கெலாம் தெளிவைக் காட்டும்
சீருள கவிஞ ருள்ளே
தக்கசீர் நாக ராஜ
தனிநடைச் சிறப்புத் தந்தோய்!
மிக்கநேர் பணியை மேவி
மேலகம் விரைத்திட் டாயோ!

(3)

முத்தமிழ் இலங்க மூச்சு
முழுமையும் முனைந்து சுற்றும்
சித்தனே நாக ராஜா!
செந்தமிழ்க் கணிகள் செய்வோய்
உத்தமக் குணனே உம்பர்க்
குவப்புறும் துதிகள் யாத்தோய்
இத்தலம் நினைவு கூர
இறையடி இணைந்திட் டாயோ!

(4)

சுரும்பெனும் நாமம் பூண்டே
சுகந்தநற் தமிழின் தேனை
விரும்பியே உண்டு வீட்டை
விளக்கிடும் விதிகள் செய்வோய்!
பொருந்திய அரங்கம் யாவும்
பொன்மொழிக் கவிதை மாலை
தரும்தமிழ் தனையன் நீயே
சால்புறும் சமயத் தாயே!

(5)

சிந்தனைக் குவப்பை ஊட்டும்
சிறுகதை செப்பும் தீரா!
தந்தனை நூற்றின் மேலாம்
தரமுள கதைகள் காதை,
ஐந்திணைக் காவி யங்கள்
அரியபல் நாட கங்கள்
சுந்தர நாவல் தந்தோய்
சோதியோ டிணைந்துள் ளாயோ.

— அரியாலையூர் வே. ஐயாத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரகவி மங்காது

## திதி வெண்பா

ஆண்டு பரிதாவி ஆடிமுப்பத் தொன்று செவ்வாய்
தூண்டுவளர் ஸப்தமிசேர் சோதிநாள் — நீண்ட
கவிஞர் மதுர கவிநாக ராஜன்
சிவனார் தாள் சேர்ந்த தினம்.

## நீ வாழி

அப்பா மதுரகவி அருள்நாக ராஜா, நீ
இப்பார் உவந்தேத்தும் இனியகவி ராஜனன்றோ
செப்பா தொருவார்த்தை சென்றதென்ன காரணமோ
எப்போது முன்னினைவால் இரங்குகின்றோம் நாமையா.

ஐயா உன்பாடல் அழகணியை நாம்துய்த்து
மெய்யாய் நலம்காணும் வேளையின்னும் உண்டெனவே
கையால் எழுதாது கருத்தில் வரைந்திருந்தோம்
நெய்யாக நாமுருக நீபிரிந்த காரணம் சொல்.

சொல்ல முடியாதுன் தொண்டின் பிரவாகம்
கல்லுருகு தேமதுர கவிராஜ னென்றால்
நல்லதமிழ் வளர்க்கும் நம்தலைவ னென்றிருந்தோம்
தில்லைச் சிவனழைக்கச் சென்றாய் திடீரெனவே!

நீசென்றா யானாலும் நின்பெருமை செல்லாது
வாயொன்றால் பாடிவந்த மதுரகவி மங்காது
தோயும் நினதுகவித் தொடையலென்றும் வாடாதே
ஆய இவைபோல அரன்பதக்கீழ் நீவாழி!

— அருட்கவி சீ. விநாசித்தம்



# பூம்புகாரில் ஒருநாள்

## தமிழ் வாழ்த்து

முன்னைய மொழிகட் கெல்லாம்
மூத்துப்பேர் முதிர்ச்சி யுற்றுப்
பின்னைய மொழிகட் கெல்லாம்
பிறப்பிடம் அருளிப் பேணி
இன்னிலத் திளமை குன்றா
எழிலுடன் இலங்கு மென்றன்
அன்னையே தமிழே அன்பாய்
அகத்திருந் தருள்க நன்றே!

## புகாரைக் கண்டு வாழ்வோம்

பண்டுலகில் பண்பினிலே பழுத்துப் பாங்கிற்
பக்குவத்தில் மூத்ததமிழ் முந்தை யோரைக்
கண்டுவரக் காதலுற்றேன் கால ஆற்றைக்
கடக்கவழி காட்டவல்லார் எவரு மில்லை
வண்டியதன் சகடமென நாட்க ளோடி
மாறிப்பின் மாதமென வளர்ந்தும் உள்ளம்
கொண்டபெரும் ஆவலது குன்றா தென்றும்
குறியதனை அறியுநெறி தேட லானேன்.

தேடிப்பல் லாண்டாகத் தெளிவே யின்றிச்
சித்தமது சோர்வுற்றே இருந்த காலை
பீடமைந்த சிலம்பென்ற ஏட்டைக் கண்டேன்
பெற்றிமையும் நற்றிறனும் பொருந்தச் சோழ
நாடதனில் காவிரிப்பூம் பட்டி னத்தே
நல்லியலார் நம்தமிழர் வாழும் செய்தி
வீடதனை நாடதனை மறக்கச் செய்ய
விண்முகிலைத் துணைக்கொண்டு விரையலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்துவிரி பாரகத்தே பரமன் பாதம்
பற்றவுளம் உற்றதனுல் பக்தி யோடு
திடமொன்று சித்தனென உயர்ந்து கொண்டல்
திரைசூடி எழில்காட்டும் சிறப்புப் பெற்ற
குடமலையைக் கண்டதனின் சென்னி மீது
குந்தியுள வேலையிலே தமிழ்ப்பாப் பாடி
நடமாடி ஒருநதிப்பெண் ஒயிலாய்ப் பாய்ந்து
நடக்கின்றுள் அவளுடனே தொடர லானேன்.

காவிரியாம் அவள்பெயரும் அவள்கால் பற்றிக்
காடுமலை கழனியுடன் கவினர் ஏரி
பூவிரிந்த காவுமுயர் புன்னை தென்னை
பொலிதோப்புப் பலகண்டு புதுமை பூக்கத்
தாவியவள் செல்லுகின்ற திசையைச் சார்ந்து
தயங்காது நடக்கின்றேன் அந்தப் பெண்ணும்
ஆவியுடன் ஆகமதை உவந்தே ஈத்தாங்
காழியெனும் தேவனுடன் ஒன்று பட்டாள்.

காவிரியும் கடலுமொன்று கரையில் நெஞ்சைக்
கவர்ந்துகவின் காட்டுவதாய்க் கலைகள் மேவி
பூவினிலே பொலியும்பூம் புகாரை மேன்மை
பூத்தொளிரும் சீரமைந்த தமிழர் தம்மை
நாவினிக்க நெஞ்சினிக்கச் சங்கங் காத்த
நாடகமும் இயலிசையும் சிறப்புற் றோங்கப்
பாவினிக்க இளங்கோவன் செய்த பெற்றிப்
பாங்கமைய வாழுகிற சிறப்புக் கண்டேன்.

வேறு

கங்குற் கனகன் கருங்கல்லாய்க்
கனத்துக் கறுத்துக் காசினியில்
எங்கும் மறைக்கத் தேய்ந்துள்ள
இந்தப் பிறையும் வானகத்தே
தொங்கும் மீனும் துலக்காது
தோல்வி காணச் செங்கதிரோன்
சிங்கக் குருளை எனச்சிலிர்த்தான்
திசைகள் யாவும் தெளிந்தனவே.



அத்தன் புகழை அலைபாட
அமைப்பார் வெண்மைச் சங்கினங்கள்
முத்துச் சிந்தி முறுவலிக்க
முருகார் வங்கம் பலகடலில்
தத்தித் தவழ்ந்து தமிழ்நாட்டின்
தகைமை காணும் காதலினுல்
பித்துப் பிடித்து வரும்பெற்றி
பிறங்கும் பெருமை நிலைகண்டேன்.

சீனப் பட்டும் சாவகத்தின்
சீரும் ஈழ நாட்டினிலே
ஆனை உணவுத் தானியங்கள்
அரபுவாசி யுடன் கரையில்
ஊனம் இல்லா உரோமருடன்சீர்
உயர்ந்த கிரேக்க கடாரத்தார்
ஞானம் பயில நம்மவர்க்கு
நயந்தீ பண்டம் குவிந்திருக்கும்.

பூவார் பொழிலில் புள்ளினங்கள்
புதுமை கொண்டே பொலிதமிழில்
பாவைப் பாடிப் பறக்கவுயர்
பரமன் பாதம் பணிபவரின்
தேவா ரத்தின் தெளிவொலியும்
சீலத் தெய்வ நெறிகாட்டும்
கோவில் மணியும் கூடியருள்
கொள்ளும் குரலாய் நிதமொலிக்கும்.

ஏரால் நிலத்தை உழுதுவிதை
எங்கும் தூவக் காவேரி
நீரைக் கொடுத்து நிதம்பேண
நெல்லு மணியும் நிறைவுற்றுப்
பாரின் பசியைப் போக்கிடவே
பாங்கார் இன்பம் பரிமளித்துச்
சீரும் திருவும் சிறக்கவைக்கும்
திறனர் தமிழர் நிலைகண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்த பண்பு மனத்தாலே
 வேடன் புறவிற் காயுடலை
அரிந்து கொடுத்த அருட்சிபியும்
 ஆன்றோர் அறத்துக் கமைந்துகன்றைப்
பிரிந்த ஆவின் துயர்கண்டு
 பிள்ளை மார்பில் தேரூர்ந்து
திரியாச் செங்கோல் நெறிமனுவும்
 சிறந்து வாழ்ந்த திருநகரம்.

முன்னோர் மரபின் முருகமைய
 முறைமை பேணும் மன்னவனின்
வன்ன மாடி மதிலகழி
 மறையோர் மனைகள் வணிகர்களின்
பொன்னார் கூடம் பூவதனைப்
 புரக்கும் ஏரார் காராளர்
துன்னி வதியும் இருக்கைகளும்
 துலங்கும் தூய நகர்கண்டேன்.

புத்தம் சமணம் சைவமுடன்
 புனித தெய்வ நெறியதனை
நித்தம் காக்கும் விகாரைகளும்
 நேரார் சமணப் பள்ளிகளும்
அத்தன் கோவில் உடனமைந்தே
 ஆன்ம உயர்விற் சிறந்தமக்கள்
சித்தம் போல நிறைவுற்றுச்
 சீராய் இலங்கும் அவ்வூரில் —

பொய்யர் இல்லை புனைசுருட்டுப்
 புகலும் புல்லர் இலையெங்கும்
செய்ய சீலம் பேணுமருட்
 செல்வர் சிறந்த சீராளர்
பொய்யா மொழியால் வள்ளுவனார்
 பூவிற் கீந்த திருக்குறளின்
மெய்யின் வழியே மேவிநிற்போர்
 விளங்கும் மேன்மை கொள்நகரம்.



நெய்தல் மருதம் முருகுமுல்லை
 நிமிர்ந்த குறிஞ்சி நிலத்தோர்கள்
செய்ய மரபின் சீர்மையினைத்
 தினமும் பேணி ஓம்புவதால்
பொய்தீர் வாழ்வு பொலிவுற்றுப்
 பூரிப் புடனே பலவழியில்
உய்தார் அந்த ஊரிலுள்ள
 உண்மைத் தமிழர் எனவுணர்ந்தேன்.

கற்புச் செல்வி கண்ணகியை,
 கலையார் செல்வி மாதவியை
பொற்புப் பொருள்சொல் புலவோரைப்
 பொன்றா நீதி புகல்வோரைச்
சிற்பத் திறனைச் செய்வினையின்
 சீரை வேற்று நாட்டினைச்சேர்
விற்பத் துவத்தில் மிளிர்பவரை
 மேவிப் பொலியும் அந்நகரம்;

ஊரில் விளையும் தானியங்கள்
 உப்போ டிறைச்சி மீன்வகைகள்
ஏரார் இஞ்சி இலவங்கம்
 ஏலங்க ளாதி கிராம்பிவற்றை
சீராய் விலையைச் செப்பியதில்
 சிறிதே இலாபம் சேர்த்துநெறி
நேர்கொள் நாளங் காடியிலே
 நித்தம் விற்கும் ஒலிகேட்டேன்.

பட்டினப் பாக்க முடன்மருவூர்ப்
 பாக்கம் சுற்றிப் பார்வையிடக்
கட்டில் லாத காலமது
 கழியக் கதிரோன் மேல்வானத்
தொட்டில் மீது துயில்பயிலத்
 தொடங்கச் சுற்றி வளையிருளை
வெட்டி வீழ்த்தி வீதியெங்கும்
 விளங்கிற் றுயர்ந்த விளக்கினங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதே சத்துப் பட்டுடன்நல்
பாங்கார் மணிகள் யாவுமுயர்
நிரையாய் வைத்து நெஞ்சத்தின்
நேர்மை நிலைக்கும் வகையினில்மெய்
உரைசெய் தல்லங் காடியிலே
விற்போ ரோதை கடற்கரையில்
இரையும் அலையை அடக்கியங்கே
எழுந்தே இரவைப் பகலாக்கும்.

இரவின் கரிய திரையகல
எங்கும் பொன்னூர் சுடரதனைப்
பரவிப் பாங்காய் பரிதியுமே
பாரைப் புரக்கக் கீழ்வானில்
வரவே கோழி கூவிடப்பேர்
வாவல் கூகை மறைவிடத்தை
மருவ மக்கள் உயிரினங்கள்
மகிழும் இன்பம் தொடருமங்கே.

வே று

நிறைவுற்ற நெஞ்சத்தால் பூரிப் புற்று
நேரார்ந்த காவேரி வழியோ டேகி
பொறையுள்ள குடமலையில் பொருந்தி நின்றேன்
பூவலஞ்செய் கொண்டலெனைக் கண்டு தூக்கிக்
கறையுற்றுக் குறையுற்றுக் கவிஞர் பண்டைக்
காலத்தின் புகழுக்கே இழுக்குண் டாக்கிச்
சிறையுற்ற வாழ்வினையே மீண்டும் கொள்ளச்
சிலம்புக்கு முன்னென்னை நிறுத்திற் றுமே.

கற்பனையா? நான் கண்ட காட்சி யாவும்
காலத்தின் விஞ்ஞானப் புதுமை யாமோ?
பெற்புறுநல் தமிழர்களின் வாழ்வே பாரில்
பொலிவுற்ற தென்றுமேல் நாட்டார் இன்று
அற்புதமாய் ஆராய்ந்தே அறைந்தார், ஆனல்
அந்தவுண்மை அறியாதிங் கழிந்தோம் மீண்டும்
நற்புலவோர் காட்டுபூம் புகாரைக் கண்டு [வோம்!
நாம்தமிழர் என்றுளத்திற் கொண்டு வாழ்

உ
சிவமயம்

சென்னையில் நடந்த உலகத் தமிழ் மகாநாடு நடத்திய 'பூம்புகாரில் ஒருநாள்' என்ற கவிதைப் போட்டியிற் பங்குபற்றி சான்றிதழும் பதக்கமும் பெற்ற

ஈழத்து எழுத்தாளரில் ஒருவரான

**கவிஞர் இ. நாகராஜன்**

அவர்களைப் பாராட்டி

12-2-68 திங்கட்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற

யாழ். இலக்கிய வட்டத்தின்
இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவின்போது

யாழ். இலக்கிய வட்டத்தினர் வழங்கிய

# வாழ்த்துப் பாமாலை

நேரிசை வெண்பா

சூழும் உலகஞ்சேர் தூய புலவரவை
வாழுங் கவித்திறனால் வான்பதக்கம் — ஈழத்தாய்
உச்சி குளிர்ந்தோங்க ஒண்கவிநீ பெற்றகதை
மெச்சி மகிழ்ந்தார்ப்போம் மேல்.

நிலைமண்டில வாசிரியப்பா

வாழிய நாக ராஜநின் மாண்பு
ஆழிசூ ழுலகத் தான்ற பேரவையிற்
பூம்புகா ரிலொரு நாளெனப் போற்றும்
தீம்பொருள் தன்னில் திக்கெலாஞ் சேரக்
கண்டதோர் மேன்மைக் கவிதைப் போட்டியில்
ஒண்டமிழ் வளமும் உன்னத சுவையும்
பண்டையோர் பண்பும் இன்றையோர் பாங்குங்
கொண்டதோர் பாட்டாற் கொற்றநற் பரிசில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றநின் பெற்றி பீடெலா மோங்கும்
இற்றைநாள் நாமின் புற்றனங் கண்டாய்
கொண்டதோ ராவல் கூடவே தேடிக்
கொண்டநி னுதவி கொண்டுநீ சென்று
குடமலை கண்டு குந்தியங் கிருந்து
நடம்புரி நங்கை காவிரி நதியின்
அருந்தமிழ் கேட்டே யார்த்தவர் பின்னல்
திரிந்துநீ தக்க விருந்துக ளுண்டு
காவிரி யாழிக் கணவனோ டொன்றும
பூவிரி கரையிற் பூம்புகார் கண்டு
பொற்புறு சிறப்பிற் போற்றிநீ திளைத்த
கற்பனை நன்றே! கற்பனை நன்றே!

**வண்ண வொத்தாழிசைக் கலிப்பா**

மழைபெய்யும் மலர்பூக்கும்
மணிகேட்கும் மனதீர்க்கும்
பழிநீங்கும் பண்போங்கும்
பார்போற்றும் நின்பாட்டால்
வழிகாட்ட வளம்நாட்டப்
பொழிகின்றாய் பொழுதெல்லா
மெழில்வாணி யருள்பெற்ற
வின்னண்ப வாழியவே!

— வி; கந்தவனம்

# பங்குடைமை அறிமுகம் (11)

— வை. சி. சிவஞானம் —

**உதாரண விளக்கம் 20**

நாட் குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| மணி மூலதனக் கணக்கு | Dr.( | ) | 250 | |
| முத்து ,, ,, | Dr.( | ) | 250 | |
| நன்மதிப்புக் கணக்கு | Cr.( | ) | | 500 |
| காசுக் கணக்கு | Dr.( | ) | 12000 | |
| ராசு மூலதனக் கணக்கு | Cr.( | ) | | 10000 |
| நன்மதிப்புக் கணக்கு | Cr.( | ) | | 2000 |
| நன்மதிப்புக் கணக்கு | Dr.( | ) | 2000 | |
| மணி மூலதனக் கணக்கு | Cr.( | ) | | 1000 |
| முத்து ,, ,, | Cr.( | ) | | 1000 |

மணி, முத்து, ராசு என்போரின் ஐந்தொகை

| கடன்கள் | | | நிலையான சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | | |
| மணி | 14750 | | சொத்துக்கள் | 22500 |
| முத்து | 14750 | | காசு | 19500 |
| ராசு | 10000 | | | |
| | | 39500 | | |
| கடன்கொடுத்தோர் | | 2500 | | |
| | | 42000 | | 42000 |

II. புத்தகங்களில் பதியப்பட்ட நன்மதிப்புத் தொகைக்கும் மதிப்பிட்ட நன்மதிப்புத் தொகைக்குமுள்ள வித்தியாசத்தை நன்மதிப்புக் கணக்கிலும் இலாப நட்டத்தைப் பிரிக்கும் முறையில் பழைய பங்காளர் மூலதனக் கணக்குகளிலும் பதிதல் வேண்டும். புதிய பங்காளன் முதலீடு செய்யுந் தொகை அவன் மூலதனக் கணக்கில் பதியப்படும்.

III. கணக்கேட்டிலுள்ள நன்மதிப்புத் தொகை அப்படியே தொடர்ந்து இருக்கவேண்டுமாயின், கணக்கேட்டின் நன்மதிப்புக் கணக்கு மீதிக்கும் உண்மைத் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையில் புதிய பங்காளன் இலாப நட்டத்தைப் பகிரும் வீதத்தில் நன்மதிப்புத் தொகையைக் கொள்முதல் செய்தல் வேண்டும்.

**உதாரணம்**

| | |
|---|---|
| கணக்கேட்டில் உள்ள நன்மதிப்புத் தொகை | 1000 |
| நன்மதிப்பின் உண்மைப் பெறுமதி | 4000 |
| புதிய பங்காளனுக்கு இலாப நட்டத்தில் உரிமை | $\frac{1}{4}$ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரண விளக்கம் 21**

| | | |
|---|---|---|
| நன்மதிப்பின் உண்மைப் பெறுமதி | = | 4000 |
| கணக்கிலுள்ள மீதி | = | 1000 |
| நன்மதிப்புத் தொகை வித்தியாசம் | = | 4000 — 1000 |
| | = | 3000 |
| புதிய பங்காளனின் நன்மதிப்பு | = | 3000 × $\frac{1}{4}$ |
| | = | 750 ரூபா |

புதிய பங்காளன் 750 ரூபா நன்மதிப்புக் கட்டணமாகச் செலுத்தல் வேண்டும்.

**சொத்துக்களை விலைமதித்தல்**

புதிய பங்காளனைச் சேர்க்குமுன் தொழில் நிலையத்திலுள்ள சொத்துக்களை விலைமதிப்பீடு செய்யவேண்டுமெனப் பழைய பங்காளரும் விரும்பலாம் அல்லது சேரும் புதிய பங்காளனும் விரும்பலாம். சொத்துக்களின் புத்தகப் பெறுமதிக்கும் நிகழ் சந்தை விலைக்குமிடையே உயர்வு அல்லது தாழ்விருப்பதினாலும், வேறு காரணங்களாலும் புதிதாகச் சொத்துக்களின் மதிப்பைத் தீர்மானிக்க விரும்புவர். சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படும் உயர்வு அல்லது குறைவு பழைய பங்காளனின் மூலதனத்தைக் கூட்டும் அல்லது குறைக்கும். சொத்துக்களின் பெறுமதி உயர்வு அல்லது குறைவைக் குறிப்பதற்காக மறுபடி விலைமதித்தல் கணக்கு அல்லது இலாப நட்டச் செம்மையாக்கற் கணக்கு என ஒரு கணக்கை ஆரம்பித்தல் வேண்டும்.

ஒரு சொத்தின் பெறுமதி புத்தகப் பெறுமதியிலும் உயர்வில் மதிக்கப்பட்டால் புத்தகப் பெறுமதிக்கும் மதிக்கப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை

சொந்துக் கணக்கில் Dr.( )
மறுப்பு விலை மதித்தல் கணக்கு Cr.( )

பக்கத்திலும் பதிதல் வேண்டும்.

புத்தகப் பெறுமதியிலும் குறைவாக மதிக்கப்படுஞ் சொத்துக்களின் வித்தியாசத் தொகையை

மறுபடி விலைமதித்தல் கணக்கு Dr.( )
சொத்துக்கள் கணக்கு Cr.( )

பக்கத்திலும் பதிதல் வேண்டும்.

மறுபடி விலைமதித்தல் கணக்கின் Cr.( )பாகக் கூட்டுத் தொகை Dr.( ) பாகக் கூட்டுத் தொகையினும் அதிகமாக இருந்தால் வித்தியாசத் தொகையை இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதப்படி பழைய பங்காளர்களுக்குப் பிரித்து மறுபடி விலைமதித்தற் கணக்கு Dr.( ) பாகத்திலும் பழைய பங்காளர் மூல தனக் கணக்கின் Cr.( ) பாகத்திலும் பதிதல் வேண்



Dr.( ) பாகக் கூட்டுத் தொகை அதிகமாக இருந்து Cr. ( ) பாகக் கூட்டுத் தொகை குறைவாக இருந்தால் வித்தியாசத் தொகையை இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதப்படி பழைய பங்காளருக்குப் பிரித்து அத்தொகைகளை மறுபடி விலை மதித்தல் கணக்கு Cr.( ) பாகத்திலும் பழைய பங்காளர் மூல தனக் கணக்கின் Dr.( ) பாகத்திலும் பதிதல் வேண்டும்.

சில பொறுப்புக்களாக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் மறுபடி விலை மதித்தல் கணக்கின் Dr.( ) பாகத்திலும் குறிப்பிட்ட ஒதுக்கக் கணக்கின் Cr.( ) பாகத்திலும் அத்தொகையைப் பதிதல் வேண்டும். இருக்கும் ஒதுக்கங்களில் தேவையற்ற ஒதுக்கங்கள் இருப்பின் அல்லது ஒதுக்கங்களின் தொகை அதிகமாக இருப்பின் அவ்வொதுக்கங்களின் கணக்கில் அத்தொகையை Dr.( ) பக்கத்திலும் மறுபடி விலை மதித்தல் கணக்கின் Cr.( ) பக்கத்திலும் பதிதல் வேண்டும்.

சொத்துக்களை மதிப்பிட்டு அதற்குரிய பதிவுகளும் மறுபடி விலை மதித்தற் கணக்கின் மீதிக்குரிய பதிவுகளுஞ் செய்தபின்னரே புதிய பங்காளனைச் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் பதியப்படும்.

**உதாரணக் கணக்கு**

இலாப நட்டத்தை 3 : 2 என்ற வீதத்தில் பங்கிடும் நாதன், தேவன் என்னும் பங்காளரின் 1-6-72-ம் திகதி ஐந்தொகை பின்வருமாறிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | நிலம் கட்டிடம் | 80000 |
| நாதன் | 60000 | | தளபாடம் | 10000 |
| தேவன் | 40000 | | இருப்பு | 25000 |
| | | 100000 | கடன்பட்டோர் | 8000 |
| கடன்கொடுத்தோர் | | 30500 | காசும் வங்கியும் | 7500 |
| | | 130500 | | 130500 |

பாலனைக் கீழ்க்காணும் நிபந்தனைக்கமைவாகப் புதிய பங்காளனாகச் சேர்த்தனர்.

(அ) பாலனைச் சேர்க்குமுன் வியாபார நிலையத்தின் சொத்துக்கள் மறுபடி விலைமதித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| நிலம் கட்டிடம் | 90000 |
| தளபாடம் | 8000 |
| இருப்பு | 27800 |

கடன்பட்டோரில் 10 % அறவிட முடியாக் கடன் ஒதுக்கமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பாலன் மூலதனமாக 40000 ரூபாவும் நன்மதிப்பாக 5000 ரூபாவும் கொண்டுவரல் வேண்டும். நன்மதிப்புத் தொகை பழைய பங்காளரின் மூலதனத்துடன் சேர்த்தல் வேண்டும். பாலனுக்கு இலாப நட்டத்தில் $\frac{1}{4}$ பங்கு பெற உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு வேண்டிய நாட்குறிப்புக்களையும், பேரேட்டுக் கணக்குகளையும், புதிய பங்காளனைச் சேர்த்த பின்னுள்ள ஐந்தொகையையும் தயார் செய்க.

உதாரண விளக்கம் 22

நாட் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| நிலம் கட்டிடக் கணக்கு | Dr.( | ) 10000 | |
| மறுபடி விலை மதித்தற் கணக்கு | Cr.( | | ) 10000 |
| மறுபடி விலை மதித்தற் கணக்கு | Dr.( | ) 2000 | |
| தளபாடக் கணக்கு | Cr.( | | ) 2000 |
| இருப்புக் கணக்கு | Dr.( | ) 2800 | |
| மறுபடி விலை மதித்தற் கணக்கு | Cr.( | | ) 2800 |
| மறுபடி விலை மதித்தற் கணக்கு | Dr.( | ) 800 | |
| அறவிட முடியாக் கடனொதுக்கம் | Cr.( | | ) 800 |
| மறுபடி விலைமதித்தற் கணக்கு | Dr.( | ) 10000 | |
| நாதன் மூலதனக் கணக்கு | Cr.( | | ) 6000 |
| தேவன் மூலதனக் கணக்கு | Cr.( | | ) 4000 |
| காசு வங்கிக் கணக்கு | Dr.( | ) 45000 | |
| பாலு மூலதனக் கணக்கு | Cr.( | | ) 40000 |
| நன்மதிப்புக் கணக்கு | Cr.( | | ) 5000 |
| நன்மதிப்புக் கணக்கு | Dr.( | ) 5000 | |
| நாதன் மூலதனக் கணக்கு | Cr.( | | ) 3000 |
| தேவன் மூலதனக் கணக்கு | Cr.( | | ) 2000 |

பேரேட்டுக் கணக்கு

காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 7500 | | |
| பாலு மூலதனம் | 40000 | | |
| ,, நன்மதிப்பு | 5000 | | |

மறுபடி விலைமதித்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| தளபாடத்தால் | 2000 | | |
| அ. மு. க. ஒதுக்கம் | 800 | நிலம் கட்டிடம் | 10000 |
| நாதன் மூலதனக் க/கால் | 6000 | இருப்பு | 2800 |
| தேவன் ,, ,, | 4000 | | |
| | 12800 | | 12800 |

நிலம் கட்டிடம்

| | | | |
|---|---|---|---|
| மீதி | 80000 | மீதி | 9000 |
| மதிப்புயர்வால் | 10000 | | |
| | 90000 | | 90000 |

— தொடரும்



# நான் விரும்பும் தொழில்

வி. கந்தவனம் B. A.

நான் விரும்பும் தொழில் ஆசிரியத் தொழிலாகும். வேறு தொழில்களுக்குப் படிக்க எனக்குத் திறமை இல்லை என்ற காரணத்தினலோ, வேறு உத்தியோகங்களை இன்றைய நிலையிற் பெறுவது கடினம் என்ற காரணத்தினலோ நான் இந்த ஆசிரியத் தொழிலை விரும்பவில்லை. எனது தந்தை ஓர் ஆசிரியர். எனது பேரனும் ஓர் ஆசிரியர். எனது பூட்டனும் ஆசிரியராகவே விளங்கியவர். ஆசிரியத் தொழில் எனது குலத்தொழிலாகி விட்டது. எனது தந்தையார் இதனை மிகுந்த பெருமையாகக் கருதுகின்ருர். இந்தப் பெருமையை எனக்கு அடிக்கடி எடுத்துக் கூறி ''மகனே, நீயும் ஆசிரியர் வேலைக்கே படித்தல்வேண்டும்'' என்று முடிப்பது வழக்கம். இதனல் இயல்பாகவே எனக்கு ஆசிரியத் தொழிலில் நாட்டம் ஏற்பட்டுவிட்டது.

தொழில்களுள் எல்லாம் மிகுந்த மாண்புடையது ஆசிரியத் தொழில். அதனுற்றன்போலும் 'எழுத்தறிவித்தவன் இறைவனுவான்' என்று சொல்லிவைத்தார்கள். இறைவனும் குருவடிவாக வந்து எமக்கு அருள்கின்றுன் என்பதை சிவஞான போதத்தின் எட்டாஞ் சூத்திரம் வலியுறுத்தும். இறைவனைக் குருவாகக் கண்ட மணிவாசகப் பெருமானும் 'கோகழியாண்ட குருமணிதன் தாழ் வாழ்க' என்று வாழ்த்துகின்றுர். குருவாக வந்து ஆன்மாக்களின் ஆட்டங்களைக் காண்பதும், அல்லல்களை அவதானிப்பதும், அவை தீர அருள் செய்வதும், அருள் செய்து ஆட்கொள்வதும் எல்லாம் வல்ல இறைவனுக்கே விருப்பமான தொன்றுகும். எனவே இத் தொழிலின் பெருமை சொல்லவும் பெரிதே.

மனித வாழ்வுக்கு அறிவு மிகவும் அவசியம். அது அற்றம் காக்கும் கருவி. அறிவு உடையார் எல்லாம் உடையார். இந்த அறிவு கல்வி கேள்விகளினுல் பெறுதல்வேண்டும். கல்விச் செல்வம் கேடில் விழுச் செல்வம் எனப்படுகிறது. செவிச் செல்வம் செல்வத்துளெல்லாந் தலை என்பர் திருவள்ளுவர் பெருமான். இத்தகைய இணையற்ற செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தை உலகத்துக்கு வழங்கும் மேலான பணியைச் செய்கின்றவனே ஆசிரியன்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்றும்,

''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்''

என்றும் திருவள்ளுவர் பெருமான் கூறுவர்.

கல்வி கண் போன்றது. இந்தக் கண்ணிலிருந்து வருகின்ற பார்வையே உண்மையான பார்வை. இந்த அறிவுக் கண்ணை - அகக் கண்ணை உலகத்தவர்க்குப் படைக்கும் கர்த்தாவாக விளங்குகின்றான் ஆசிரியன். எனவே, இது ஒரு பொறுப்பு வாய்ந்த தொழிலாகும்.

இத்தகைய பெருமை வாய்ந்த பொறுப்பு வாய்ந்த தொழிலைப் புரிவதற்குப் பல அரிய தகைமைகள் வேண்டப்படுகின்றன. முதற்கண் ஆசிரியர் நிரம்பிய அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும்.

இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.

எனவே தான் கற்ற கல்வியை, பெற்ற அறிவை மாணாக்கர் உணரும் வண்ணம் விரித்துரைக்கும் தகைமை ஓர் ஆசிரியருக்கு இன்றியமையாதது. இவற்றோடு ஆசிரியர் பொறுமையுடையவராதல் வேண்டும். அவர் அன்பு நிறைந்தவராயும் பண்பு மிகுந்தவராயும் விளங்குதல் அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புபவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். சுருக்கமாகக் கூறின் ஓர் ஆசிரியர் 'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' ஆக விளங்குதல் வேண்டும்.

இத்தகைமைகள் அனைத்தும் என்னிடத்தில் உள்ளனவா என்பது கேள்வி. இவற்றுட் பெரும்பாலான தகைமைகளுக்கு நான் ஏற்கனவே உரித்துடையவனாகி விட்டேன்.



நல்லொழுக்கங் குலவழி வந்து என்னுள்ளே புகுந்துவிட்டதொன்று. ஒழுக்கத்தின் உயர்வை நான் உணர்ந்துவிட்டேன். இந்த உணர்வே உறுதியான நிலைக்கு உறுதுணையாவது. எனவே, அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யேன். உயிர்ப் பண்பாகிய ஒழுக்கத்தின் உயர்வால் மற்றைய பண்புகளும் என்னிடத்தில் விருத்தியாகி வருகின்றன. ஆசிரியத் தொழில் எனது முன்னோரின் பரம்பரைத் தொழிலாக விளங்கிய காரணத்தால் கணக்கற்ற பல நூல்களை எனது தந்தையார் தனது சொத்தாகத் தேடிவைத்திருக்கின்றார். எனது ஓய்வான நேரங்களிலெல்லாம் இந் நூல்களைப் படித்து எனது அறிவை விருத்தி செய்யும் வேலையில் ஈடுபட்டு வருகிறேன்.

இன்றைய நிலையில் ஓர் ஆசிரியரது பணிகளும் பொறுப்புகளும் அதிகமாகி வருகின்றன. நாட்டிலே உள்ள பல பிரச்சினைகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றுவதன் மூலம் தீர்வுகாண முடியும் என்று நம்புகின்றேன்.

இன்றுள்ள பிரச்சனைகளுள் வேலையில்லாப் பிரச்சினை பிரதானமானது. நாட்டின் வளத்தை விருத்தி செய்து தொழில் முறைகளை வளர்க்கும் வகையில் மாணவருக்கான பாடத் திட்டமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர் கையிலேயுள்ளது. பாடசாலையைவிட்டுச் சென்றதும் ஒரு மாணவன் தன் படிப்பிலே நம்பிக்கை வைத்துத் தானே ஒரு தொழிலைப் பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கும் நிலைக்கு அவனை ஆசிரியர் வளர்க்க வேண்டும்.

இது மட்டுமல்லாது தேசிய ஒற்றுமையையும் ஆசிரியர்கள் நினைத்தால் நன்கு வளர்க்க முடியும்.

(1) சிங்கள மாணவர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கும், தமிழ் மாணவர்களைச் சிங்களப் பகுதிகளுக்கும் கல்விப் பயணங்களை மேற்கொள்ளச் செய்வதன் மூலமும்

(2) இந்த இரு இனத்தவருக்கிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கருத்தரங்கங்களை ஏற்படுத்துவதன் மூலமும்

(4) கலாச்சார நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதன் மூலமும்

(5) பேனா நட்புறவை வளர்ப்பதின் மூலமும்

நியாயமான அளவுக்கு இந்த இரு இனங்களினதும் இளஞ் சந்ததிகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தமுடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக எதிர்காலத்திலே ஓர் உன்னதமான சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பும் ஆசிரியர் கையிலேயே யுள்ளது. பொறுப்பும் நாட்டுப் பற்றும் நன்கு வலியுறுத்தப்படாமையினாலேயே மாணவர்கள் இன்று ஆர்ப்பாட்டங்களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபடுகின்றார்கள். உயர்ந்த நெறிகளைப் புகட்டி, பண்புகளை வளர்த்து, ஒழுக்கத்தை ஓம்பச் செய்து, பொறுப்பினை உணரச் செய்து மாணவர்களை நல்வழிப்படுத்தினால் எதிர் காலத்தில் எவ்வளவோ அமைதி ஏற்பட வாய்ப்புண்டு.

சில ஆசிரியர்கள் இவ்விதமான தங்கள் பொறுப்புக்களை உணராமையினாலும் தமக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்யாமையினாலும் ஆசிரிய உலகம் முழுவதற்குமே கெட்ட பெயரைத் தந்துள்ளனர். இந்தக் கெட்ட பெயரைப் போக்க வேண்டுமென்பதுவும் என் உள்ளவாவாகும்.

---

**பொது அறிவுப் போட்டி இல. 5**
**1-10-72 வெற்றிமணியில்**
**வெளிவரும்.**

— ஆசிரியர்



# ஒரு



# ஒரே தெய்வம்

— குரும்பசிட்டி, கே. எஸ். சிவகுமாரன் —

5

மீனா வீட்டுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தாள். அவள் கணவன் புகை பிடித்திருந்த சிமிலி ஒன்றைத் துடைத்துக்கொண்டே 'இனி விளக்குப் பிரகாசமாக இருக்கும்' என்றான். பொருள் விளங்கிய பொன்மகள் புகை பிடித்த சிமிலியாகவே உள்ளே சென்றாள்.

புகையிரதத்தை விட்டு இறங்குகின்றான் பாஸ்கர். அந்தப் புகையிரத நிலையத்திலிருந்து அவன் பிறந்த கிராமம் மூன்று மைல் தொலைவில்தான் உள்ளது. இளைத்த தன் தேகத்தைச் சுமந்துகொண்டு இளைக்க இளைக்க வந்து சேர்கின்றான் தன் கிராமத்துக்கு.

அவனை யார்தான் அடையாளங் கண்டு கொள்ளப் போகின்றார்கள். அவன்தான் அவ்வூரை விட்டுச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது வருடம் ஆச்சே! அப்படி அவனை அறிந்தவர்கள் இருப்பினும் இப் பூமியில் வாழும் வயதைக் கடந்தவர்களாகவேதான் இருப்பார்கள். ஏன்? அவனைப் பெற்றதாய் இருந்திருந்தால்கூட அவனைத் தன் மகன் என்று சொல்ல முடியாத அளவுக்கு இளைத்துப் போயிருந்தான். வயதோ அறுபதுதான் — ஆனால் அவனுடைய நரைத்த முடியும் சுருண்ட தாடியும் சுருங்கி மினுங்கிய அவன் தோலும் அவனை எண்பது வயதுடையவன் ஆகவே காட்டிக்கொண்டிருந்தன. அன்று கம்பீரமாகத் திரிந்த இடமெல்லாம் திரிந்து திரிந்து தன் பழைய நினைவுகளை மீட்டு மீட்டு இரசிக்கின்றான். வண்டில் போன வீதியெல்லாம் கார் போவதை உணர்கின்றான். தெருவின் மூலையால் திரும்புகின்றான். ஒரு மரண ஊர்வலம் வந்துகொண்டிருப்பதை அறிகின்றான். அருகில் வந்தவரைப் பார்த்து "யாரப்பா இறந்தது?" என்று கேட்டான் பாஸ்கர். "கணக்கப்பிள்ளை சிங்காரவேலு" என்றான் அவன். பாஸ்கரால் நம்பவே முடியவில்லை. எல்லோருக்கும் கணக்கெழுதும் அவனுக்குக் கூடவா இறைவனும் எழுதிவிட்டான் என்று எண்ணினான் பாஸ்கர். பாஸ்கர் ஊரைவிட்டுப் போகும் போது கண்ணீர் விட்டவர்களுள் அவனும் ஒருவன். ஆனால் அவன் இன்று உலகைவிட்டே போகின்றான். அவனுக்காக பாஸ்கர் கண்ணீர்விடாமல் இருக்கமுடியுமா? நல்லவர்களுடைய மண ஊர்வலத்தை - வேண்டாம் மரண ஊர்வலத்தையாவது பார்க்கக் கொடுத்து வைக்கக் கூடாதா? என அவன் இறைவனை நொந்தான். பாஸ்கரைத் தாண்டிச் சிங்காரவேலு சென்றுவிட்டான். ஆனால் பாஸ்கரின் மனதை மட்டும் அவன் தாண்டிச் செல்லவில்லை.

ஒவ்வொரு வெள்ளியும் குளித்து அவன் போன முருகன் கோவிலை நினைக்கின்றான். தெருவால் போகும் ஒவ்வொரு பையன்களிடமும் அந்தக் கோவிலுக்குச் கூட்டிச் செல்லுமாறு கேட்கின்றான். ஒருவரும் சம்மதிக்கவில்லை. அவனுக்கு நன்றாகத் தெரிகிறது அவர்கள் எல்லோரும் தன்னோடு விளையாடித் திரிந்த நண்பர்களுடைய பிள்ளைகளாகத்தான் இருக்கும் என்று. ஆனாலும் தன்னை அறிமுகப்படுத்த விரும்பவில்லை.



இறுதியில் அன்று தொட்டு நிற்கும் ஒரு பெரிய ஆல மரத்தின்கீழ் அமர்கின்றான். ஒருகணம் - முன்னர் அந்த மரத்தின் கீழ் கிளித்தட்டு மறித்து விளையாடுவதை நினைந்து நினைந்து பூரிக்கின்றான். மறுகணம் தன் கிழிந்த உடையால் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுகின்றான்.

அவன் அருகே 'முருகா!' என்று சொல்லிக்கொண்டே ஒரு வயோதிபர் அமர்கின்றார். பாஸ்கர் மெல்ல எழுந்து சென்று "அந்த முருகன் எங்கே ஐயா இருக்கிறான். அந்த இடத்துக்கு ஒருக்கால் அழைத்துச் சென்றால் உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்" என்கின்றான். தன்னிலும் இளமையுடைய பாஸ்கரைப் பார்த்து "அப்பு ஊருக்குப் புதிசோ" என்று கூறிக்கொண்டே தடியினில் பிடித்துக் கோவிலுக்குக் கூட்டிச் செல்லுகின்றார்.

அன்று தோளில் மண்வெட்டியும் கையில் மாடும் கொண்டு துளிர் நடையில் சென்ற பாஸ்கர் சண்ணுன கோலுடன் தளர்நடையில் சென்றுகொண்டிருக்கிறான். அன்று வயலில் படுத்து வயலில் வளர்ந்த பாஸ்கருக்கு தங்கள் வயலைக் கண்ணின்றி உணர முடியாதா?

கிழவனிடம் "இது யாருடைய வயல்?" எனக்கேட்டான். கிழவனும் "இது வேலாயுதம் என்ற ஒருவர் இருந்தவர். அவருடைய மகள் தந்தை இறந்ததும் விற்றுவிட்டுச் சென்றுவிட்டாள்" என்று கூறினார். "யாருக்கு விற்றது? அவள் இப்பொழுது எங்கே?" என்றான் பாஸ்கர். "யாருக்கு விற்றாள் என்பது தெரியவில்லை. அவளையும் நான் இன்னும் காணவில்லை. அவளுக்கு ஒரு தம்பியும் இருந்தான். அவன் தற்கொலை செய்ததாக ஒரு கதை அடிபட்டது. என்ன உண்மையோ பொய்யோ தெரியவில்லை" என்றான் கிழவன். "அவளுடைய தம்பி எப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப்பட்டவன்'' என்றான் பாஸ்கர். கிழவனும் ''அவன் நல்ல இரக்கம் உள்ளவன். நான் முன்னர் அவர்களுடைய வயலில்தான் வேலை செய்கிறான் - அந்த நேரத்தில் அவனுடைய தந்தை ஒரு பறை நெல்லுக் கொடுக்கச் சொன்னால் இது போதுமா உன் குடும்பத்துக்கு என்று சொல்லி இரண்டு பறை நெல்லுத் தருவான். இது ஒன்றே போதாதா அவனுடைய இரக்கக் குணத்துக்கு'' என்றான். யார்தான் தம்மைப் பிறர் புகழும்போது மகிழ்ச்சியடையாமல் இருப்பார்கள். அவன் உள்ளமும் பூரித்தது. ஆனால் தான் தற்கொலை செய்துவிட்டதாகக் கூறிய கிழவனின் வார்த்தைகள் ' நான் ஏன் இன்னும் உயிருடன் இருக்க வேண்டும்?' என்ற கேள்வியை அவன் மனதில் எழுப்பிய வண்ணமிருந்தது.

— தொடரும்

மதுரகவி நாகராஜனின்
ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரவுண்சன் இன்டஸ்றீஸ்
80 1/4, பிறைஸ் பிளேஸ்,
கொழும்பு - 12.

''அமரர் மதுரகவி''
இ. நாகராஜனின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

* *
* *
* *
* *

அவர் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

க. தர்மலிங்கம்
பிரதான வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
— தங்கப்பவுண் நகைமாளிகை —
கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.

K. N. M. Meeran Sahib
JEWELLERS & DIAMOND MERCHANT
— SOVEREIGN PALACE —
Kannathiddy, Dial: 585 JAFFNA.

திருக்குறள்

இலங்கைக்கு முதன் முதலாக நீல சோப்பை
அறிமுகப்படுத்தியவர்கள்
மில்க்வைற் ஸ்தாபனத்தாரே.
1-7-72 தொடக்கம்
மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில்
திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றது.
மேலுறைகளைச் சேகரித்து,
பரிசுத் திட்டத்தில் பங்குபற்றுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தபாற் பெட்டி இல. 77
யாழ்ப்பாணம்.

இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org